---

**உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம் - 2014**

---

உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் உள்ளூராட்சி சேவைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 264) 62(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாகிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 நிதியத்தின் செயற்படு நிலை

தேசிய அரசாங்க சபையின் 1974 இன் 16 ஆம் இலக்க உள்ளுராட்சி சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கூறப்பட்ட நிதியத்தின் நிருவாகம் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2010 திசெம்பர் 13 ஆந் திகதிய 12/2010 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றுநிரூபத்தின் மூலம் நிதியத்தின் மாதாந்த சம்பளப் பதிவேடு தயாரித்தல் மற்றும் கோவைகளின் பொறுப்புத்தன்மை 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் பிரதேச செயலாளருக்கு பன்முகப்படுத்தப்பட்டிருந்தது.

## 1.5 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கை

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இற்கு முரணாக காசு அடிப்படையின் பிரகாரம் வருமானச் செலவினக் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதியத்தின் வருமானச் செலவினக்கூற்றில் நிதியத்திற்குரிய சகல பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்காக திறைசேரியிலிருந்து கிடைத்த நிதி ஏற்பாடுகள் மற்றும் அதன் மூலம் செலுத்தப்பட்ட செலவினம் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் பொதுக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டமையால் ரூபா 884,598,279 தொகையான வருமானமும்

செலவினமும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் படி நிதிக்கூற்றுக்களில் உள்ளபடியான நிலைமை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய பங்களிப்புப் பணத்தின் கீழ் காணப்படுகின்ற உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து கிடைக்கவேண்டிய மீதி ரூபா 1,482,807,242 ஆக இருந்த போதிலும், பற்றுச்சீட்டிடல் பதிவேட்டின் படி பெறவேண்டிய பங்களிப்புப் பண மீதி ரூபா 1,418,788,477 ஆனமையால் ரூபா 64,018,765 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இந்த வேறுபாட்டிற்கான காரணம் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

முன்னைய ஆண்டின் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 604,652 தொகையான மதிப்பிழந்த காசோலைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) தேசிய அரசாங்க சபையின் 1974 இன் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு மற்றும் 2011 பெப்ரவரி | உள்ளூராட்சி நிறுவனங்களினால் நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணமான ரூபா 1,481,572,840 தொகையான நிலுவை மீதி உள்ளூராட்சி சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி |

| | | |
|---|---|---|
| | 24 ஆந் திகதிய 02/2011 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றுநிருபத்தின் 4:3 ஆம் பந்தி | நிறுவனங்களுக்கு செலுத்துவதற்குள்ள ஏதாவது தொகையிலிருந்து கழித்துக்கொள்வதற்கோ அல்லது சுற்றுநிருப ஆலோசனையின் பிரகாரம் பெற்றுக் கொள்வதற்கோ போதியளவான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபத்தின் 4.1 (அ) பந்தி | நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட வருடாந்த பாதீடு அதன் உள்ளூராட்சி அதிகாரசபை மற்றும் அமைச்சின் செயலாளரால் அதற்கு முன்னைய ஆண்டின் செப்தெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டு செப்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கும் அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2012 பெப்ரவரி 08 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றுநிருபம் | மாவட்ட செயலாளர்களினால் அந்தந்த மாதத்தில் மரணித்தவர்கள் தொடர்பான அறிக்கை அடுத்துவரும் மாதத்தின் 25 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதனைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 38,013,664 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 25,118,987 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது நிதி விளைவுகளில் ரூபா 63,132,651 தொகையான வீழ்ச்சியினைக் காட்டியது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 சனவரி முதல் உள்ளூராட்சி ஓய்வூதியக் கோவைகளை பிரதேச செயலகங்களுக்கு பன்முகப்படுத்துவதற்கு முன்னர் ஓய்வூதியக்காரர்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் அவர்கள் கடமையாற்றிய நிலையங்கள் தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்தினால் அறிக்கையொன்று தயாரிக்கப்படாமையினால் மாவட்ட செயலகத்தின் மூலம் மரணித்தவர்களின் அறிக்கையையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் உரிய உறுதிப்படுத்தலின்றி மீளாய்வாண்டின் போது ரூபா 2,003,477 தொகை மரணித்தவர்கள் சார்பாக பங்களிப்புப் பணக் கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஓய்வூதிய கணனித் தரவு முறைமைகளின் பிரகாரம் ஆண்டின் போது மரணித்த ஓய்வூதியக்காரர்களின் எண்ணிக்கை 331 ஆக இருந்த போதிலும் அந்த எண்ணிக்கையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முறைமையொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகளின் அளவு தொடர்ச்சியாக அதிகரித்திருந்த போதிலும் அந்த அளவினை நிதிரீதியாக இனங்கண்டு

அவ்வதிகரிப்பை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக ஒப்பீட்டுப் பதிவேடு தயாரிக்கப்பட்டிராததுடன் ஓய்வூதியத்திற்கு உரித்தைக் கூறுகின்ற ஓய்வூதியக்காரர்களின் நாளதுவரையாக்கப்பட்ட பெயர்ப்பதிவேடு நிதியத்திடம் காணப்படாமையாலும் ஓய்வூதியக்காரர்கள் மரணித்தவுடன் அதற்கான சீராக்கங்களை செய்வதற்கு முன்வராமையின் காரணமாக இரு தடவைகள் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம் என கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது.

## 4.2 பங்களிப்புப் பண முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 86 உள்ளூராட்சி நிறுவனங்களில் கடந்த மூன்று வருட காலம் முதல் எவ்வித பங்களிப்புப் பணத்தையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த நிறுவனங்களுக்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 498,066,707 கூட்டுத்தொகையான பங்களிப்புப் பணம் நிலுவையாகக் காணப்பட்டது. அது மொத்த நிலுவைப் பங்களிப்புப் பணத்தில் 33.67 சதவீதமாகும்.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்குரிய 17 உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் பங்களிப்புப் பணக் கொடுப்பனவு மற்றும் அப்பங்களிப்புப் பணம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கான பெறுவனவுகளுக்கிடையே ரூபா 2,169,430 தொகையான குறைவும் ரூபா 145,250 தொகையான அதிகரிப்பும் வேறுபாடுகளாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளுடன் உள்ள தகவல்களின் படி 07 மாவட்டங்களில் 50 உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய 2014 ஆம் ஆண்டின் போது மரணித்தவர்களுக்காக சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) ஓய்வூதிய முறைமை முகாமைத்துவம்